தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

தரம் ஐந்து மாணவர்களுக்கான


# முன்னோடிப் பரீட்சை - இல-05

## வினாத்தாள் - I

சுட்டெண்:- ........................................

நேரம் :- 1 மணித்தியாலம்


● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.




(01) 


இக்கூட்டினுள் அதிகமாக இருக்கும் வடிவம்,

(1)  (2)  (3) 




(02) கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்கு வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



(1)  (2)  (3) 


(03) 

தரப்பட்டுள்ள திண்மத்தை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து நோக்கினால் புலப்படும் முறை,

(1)  (2)  (3) 


(04) வட்ட வடிவ மைதானமொன்றைச் சுற்றி ஒன்றுக்கொன்று சமதூர இடைவெளியில் கொடிகள் நடப்பட்டன. 3 கொடிகளுக்கு இடையிலான தூரம் 6m எனின், 10 கொடிகளுக்கு இடையிலான மொத்தத் தூரம்,

(1) 60m (2) 27m (3) 30m


(05) 

இச்செவ்வக வடிவத்தினுள் ஒரேயளவான 8 வட்ட வடிவங்கள் வரையப்பட்டுள்ளன. செவ்வகத்தினுள் இன்னும் வரையக்கூடிய வட்டங்களின் எண்ணிக்கை,

(1) 12 (2) 11 (3) 10

(06) 


உரு A



உரு B

உரு A காட்டும் சதுர வடிவக் கடதாசித் துண்டு புள்ளிக்கோட்டின் வழியே இரண்டாக மடிக்கப்பட்டு அதன்பின்னர் உரு B காட்டும் முறையில் புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டப்பட்டது. வெட்டிய பின் கிடைக்கும் கடதாசித் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 6

(07) 


உருவில் சதுர வடிவமொன்றினுள் பிள்ளையொன்று P யிலிருந்து Q வரை பயணித்த பாதை காட்டப்பட்டுள்ளது. அதன்படி, அப்பிள்ளை பயணித்த தூரம்,

(1) 16m (2) 12m (3) 24m


(08) கடிகாரமொன்றின் மணித்தியால முள் நாளொன்றுக்கு சுழலும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 24 (2) 12 (3) 2

(09) ▲ X ● = 36 ஆகவும், ▲ − ● = 5 ஆகவும் இருப்பின் ▲ + ● இன் பெறுமானம்,

(1) 15 (2) 13 (3) 16

kalvi.lk

(10) 


எண்கள் இடப்பட்டுள்ள கோலத்தை இனங்கண்டு A, B ஆகிய வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.

(1) A = 2 , B = 3 (2) A = 1 , B = 5 (3) A = 4 , B = 2

(11) பின்வரும் சொற்கள் குறியீடுகளினால் எழுதப்பட்டுள்ள முறைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| |
|---|
| சிறுவர் |
| வசனம் |
| மஞ்சள் |

| |
|---|
| □ 0 ⊠ ⧗ |
| ⧗ ⊕ 0 ↑ |
| △ ○ □ ✳ |




அதன்படி, வசனம் எனும் சொல்லைக் காட்டும் குறியீடுகள்,

(1) △ ○ □ ✳ (2) ⧗ ⊕ 0 ↑ (3) □ 0 ⊠ ⧗

(12) ஒரு பெட்டியில் கறுப்பு நிறப் பேனைகள் 5 உம், நீல நிறப் பேனைகள் 7 உம் உள்ளன. பிள்ளையொன்று இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு பெட்டியிலிருந்து ஒவ்வொரு பேனையாக வெளியே எடுத்தது. கட்டாயமாக அப்பிள்ளை நீல நிறப் பேனையைப் பெற்றுக்கொள்வதற்கு பெட்டியிலிருந்து எடுக்க வேண்டிய பேனைகளின் ஆகக் குறைந்த எண்ணிக்கை,

(1) 7 (2) 6 (3) 8

(13) பின்வரும் உருக்களை முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் வைக்கும்போது, மாற்றமின்றி அதே வடிவில் தெரியும் உரு,

(1)  (2)  (3) 

(14) கீழே தரப்பட்டுள்ள கூற்று பிழையானது என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.


ஒலிம்பிக் போட்டிகளுக்காக ஜப்பானிலிருந்து நீளம் பாய்தல் போட்டியில் பங்குபற்றிய மகளிர் அணி முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது.


(1) நீளம் பாய்தல் ஒரு குழு விளையாட்டு அல்ல என்பதனாலாகும்.

(2) நீளம் பாய்தல் போட்டியில் பெண்கள் பங்குபற்றுவதில்லை என்பதனாலாகும்.

(3) ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் நீளம் பாய்தல் போட்டி இடம்பெறுவதில்லை என்பதனாலாகும்.

(15) கீழே முதலில் தரப்பட்டுள்ள கட்டத்தினுள் இருக்கும் உருக்களுடன் பொருந்தக்கூடிய உரு,




(1)  (2)  (3) 

(16) பரானா பிறக்கும்போது பரானாவின் அம்மாவின் வயது 35 ஆகும். அதன்படி, பரானாவின் தம்பி பிறக்கும்போது பரானாவின் அம்மாவின் வயதாக இருக்கக்கூடியது,

(1) 30 (2) 38 (3) 33

(17) ரமேஷ் குறித்த ஒரு வாரத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் பாடசாலைக்குச் சென்றான். அவ்வாரத்தில் அவன் பாடசாலைக்குச் சென்ற நாட்களின் எண்ணிக்கை 3 ஆகும். அதன்படி, அவ்வாரத்தில் அவன் பாடசாலைக்குச் செல்லாத நாட்கள்,

(1) செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை (2) திங்கட்கிழமை, புதன்கிழமை (3) புதன்கிழமை, வெள்ளிக்கிழமை

(18) 


இக்கனவுருவின் விளிம்புகளின் மொத்த நீளம்,

(1) 24cm (2) 30cm (3) 28cm


(19) ஆங்கில எழுத்துக்கள் சில குறியீடுகளினால் எழுதப்பட்டுள்ள முறை கீழே தரப்பட்டுள்ளது.




E T N T E E = △ □ ○ □ ○ □

எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள ஒழுங்குமுறைக்கேற்ப குறியீடுகள் வரையப்படவில்லை. அதன்படி, **TEN** எனும் சொல் குறியீடுகளினால் எழுதப்பட்டுள்ள விதம்,


(1) □ △ ○ (2) ○ □ △ (3) △ ○ □

(20) கீழுள்ள உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க. சுட்டெண்:-..........................................







(1)  (2)  (3) 

(21) தாயக்கட்டையொன்றை இரு பக்கங்களிலிருந்து பார்த்தபோது புலப்பட்ட முறைகளைக் கீழுள்ள A, B ஆகிய உருக்கள் காட்டுகின்றன.





அதன்படி, அத்தாயக்கட்டையை அம்புக்குறி காட்டும் திசைக்கு ஒருமுறை புரட்டினால் மேலே வரும் முகம்,

(1)  (2)  (3) 




(22) 



இக்கம்பிச் சட்டகத்தை அமைக்கத் தேவையான கம்பிகளின் முழு நீளம்,

(1) 25cm (2) 30cm (3) 20cm

(23) 


இக்கடதாசியைப் புள்ளிக்கோட்டின் வழியே இரண்டாக மடித்தபின் காணக்கூடிய முறை,

(1)  (2)  (3) 

(24) 

இப்பெரிய முக்கோண வடிவக் கார்ட்போர்ட் துண்டிலிருந்து வெட்டி எடுக்கக்கூடிய நிழற்றப்பட்டுள்ள முறையிலான முக்கோண வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 16 (2) 12 (3) 9




(25) 



இவ்வுருவிலுள்ள மூன்று வட்டங்களுக்கும் உரித்தான ஆங்கில எழுத்து,

(1) D (2) B (3) E

(26) 

இவ்வடிவத்தை அமைத்துக்கொள்ளத் தேவைப்படும் ஈர்க்குத் துண்டுகள் நான்கையும் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(27) 


சுனிலிடம் உள்ள நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் இவ்வட்ட வரைபினால் காட்டப்பட்டுள்ளன. சுனிலிடம் உள்ள ரூபாய் 2.00 நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை 3 ஆகும். அதன்படி, சுனிலிடம் உள்ள ரூபாய் 5.00 நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை,

(1) 9 (2) 15 (3) 12

(28) குறித்த ஒரு வரிசையில் ஆசிம் முதலாவதிலிருந்து 9 வது ஆகவும் வரிசையின் கடைசியில் இருந்து 12 வது ஆகவும் நிற்கின்றான். அதன்படி, வரிசையில் நின்றுகொண்டிருக்கும் நபர்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 22 (2) 21 (3) 20


(29) **சென்ரிமீற்றர் - மீற்றர்** போல, **நகரம் -** .......................................

(1) மாகாணம் (2) மாவட்டம் (3) கிராமம்

(30) ஐந்து வெள்ளிக்கிழமைகளைக் கொண்ட செப்டெம்பர் மாதமொன்றின் வெள்ளிக்கிழமைகளின் திகதிகளினுடைய கூட்டுத்தொகையாக இருக்கத்தக்க அதிகபட்ச பெறுமானம்,

(1) 80 (2) 85 (3) 82

kalvi.lk


(31) 

உருவின் $\frac{1}{2}$ விடக் கூடுதலாக நிழற்றுவதற்கு நிழற்றப்பட வேண்டிய சிறிய சதுரவடிவக் கூடுகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 6 (2) 8 (3) 7

(32) தற்போதிலிருந்து 15 நிமிடங்களுக்கு முன் நேரம் மு.ப. 7.30 மணியாகும். அதன்படி, தற்போதிலிருந்து 30 நிமிடங்களுக்குப் பின் நேரம்,

(1) மு.ப. 8.00 (2) மு.ப. 8.15 (3) மு.ப. 8.30

(33) 

உருவில் ஒரேயளவான சதுரமுகிகளையும் ஒரேயளவான கனவுருக்களையும் ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள கனவுருக்களின் எண்ணிக்கையும் சதுரமுகிகளின் எண்ணிக்கையும் சமமாகும். அதன்படி, அதிலுள்ள சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 2

(34) அருகருகே அமைந்துள்ள 3 எண்களின் கூட்டுத்தொகை 33 ஆகும். அதன்படி, சரி நடுவில் அமையும் எண்,

(1) 12 (2) 10 (3) 11

(35) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.


காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

பாடலில் எதன் சிறப்பு எடுத்துக்கூறப்படுகின்றது?

(1) உடற்பயிற்சி (2) காலை மாலை (3) காற்று

(36) "சிங்கராஜ குன்றில் மிகவும் பெறுமதி வாய்ந்த தாவரங்கள் உள்ளன." இக்கூற்று பிழையானது. இக்கூற்று சரியாவதற்குச் செய்ய வேண்டிய மாற்றம்,

(1) "பெறுமதி வாய்ந்த" எனும் சொல்லுக்குப் பதிலாக "உயரமான" எனச் சேர்த்தல்.
(2) "குன்றில்" என்பதற்குப் பதிலாக "வனத்தில்" எனச் சேர்த்தல்.
(3) "தாவரங்கள்" எனும் சொல்லிற்குப் பதிலாக "ஔடதம்" எனச் சேர்த்தல்.

(37) 


இக்கடிகார முகத்தை முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் வைத்துப் பார்த்தால் காணக்கிடைக்கும் நேரம்,

(1) 2.30 (2) 10.30 (3) 9.30

(38) பின்வரும் பழமொழியின் கருத்தைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

**பழமொழி :- ஆனைக்கும் அடி சறுக்கும்.**

(1) வலியவனும் ஒருநாள் மெலியவனிடம் தோற்க நேரிடும். (2) திறமை மிக்கவர் எதனையும் எளிதில் சாதிப்பர்.
(3) எல்லை கடந்த ஆசை துன்பத்தைத் தரும்.

(39) 


A திசையிலிருந்து இந்த உருளையைப் பார்க்கும்போது வரையப்பட்டுள்ள வட்டங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு தென்படும். இந்த உருளையை B திசையில் பார்க்கும்போதும் இதே முறையில் தென்படும். அதன்படி, இவ்வுருளையைச் சுற்றி வரையப்பட்டுள்ள வட்டங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 24 (2) 18 (3) 21

(40) "மிக மகிழ்தல்" எனும் கருத்தைத் தரும் மரபுத்தொடர்,

(1) உச்சி குளிருதல் (2) தோள் கொடுத்தல் (3) காது கொடுத்தல்

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்**
**தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022**
**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-05

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

இயற்கையை பேணிப் பாதுகாப்பதற்கு மனிதர்கள் ஒத்துழைப்பதில்லை. இவ்வாறான செயல்களால் எமது இருப்பிடத்தை விட்டு நாம் விரட்டப்பட்டுள்ளோம். பூக்களைத் தேடி நீண்ட தூரம் பயணிக்கின்றோம். உணவிற்காக வாழ்நாள் முழுவதும் அங்கும் இங்கும் அலைகிறோம். அதனால் எமது வாழ்க்கை மிகவும் கடினமாகி விட்டது.

(i) "செயற்கை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ..............................

(ii) உயர்திணை, பன்மை, தன்மைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. ..............................

(iii) "வசிப்பிடம்" என்ற கருத்தை தரும் சொல்லை இனங்கண்டு எழுதுக. ..............................

(iv) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழிச் சொல்லை எழுதுக. ..............................

(v) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக. ..............................

(vi) இயற்கையைப் பேணுவதில் ஒத்துழைப்பு வழங்காதவர் யார்? ..............................

**(02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திலுள்ள நிறுத்தக்குறிகளின் பெயர்களை எழுதுக.**

"சீனி , பருப்பு , அரிசி என்பவற்றைக் கொண்டு வந்தீர்களா?" என அம்மா கேட்டார்.

(i) .................... (ii) .................... (iii) .................... (iv) ....................

**(03) பின்வரும் ஆண்பால் வாக்கியத்தைப் பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

அவன் பாடம் படித்தான் :- ..............................

**(04) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(i) உயர்திணை, படர்க்கை, பன்மை, பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. ..............................

(ii) தன்மை, பன்மை, வினைமுற்றுச் சொல் ஒன்று எழுதுக. ..............................

**(05) பின்வரும் இணைமொழிகளின் கருத்தை எதிரே தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.**

(i) திட்டவட்டமாக :- .................... (ii) கண்ணுங்கருத்துமாக :- ....................

**(06) பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள உவமைத் தொடர்கள் உணர்த்தும் கருத்தினை எழுதுக.**

(i) தசரதன் இறந்த செய்தியைக் கேட்ட இராமன் **அடியற்ற மரம் போல** விழுந்தான். ..............................

(ii) **இலை மறை காய் போல** இருந்த மாணவனின் திறமையை ஆசிரியர் வெளிக்கொண்டு வந்தார். ..............................

**(07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுவாயைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) .............................. பரீட்சைக்கு நன்றாக விடையளித்தீர்களா?

(ii) .............................. மைதானத்தில் விளையாடுவார்கள்.

(iii) .............................. காலையிலேயே எழுந்து பாடசாலைக்குச் சென்றாள்.

**(08) தடித்த எழுத்துக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை இட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.**

**ஒற்றுமையுடன்** வாழ்பவர்களை அனைவரும் **புகழ்ந்து** பேசுவர்.

..............................................................................................

**(09) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

பூனை சீறும் அதுபோல கரடி ..............................

kalvi.lk

(10) வயோதிபர் உயரமான மரத்தில் சிரமப்பட்டு ஏறினார். இவ்வாக்கியத்திலுள்ள,


(i) பயனிலை அடைமொழியை இனங்கண்டு எழுதுக. ..............................

(ii) செயப்படுபொருள் அடைமொழியை இனங்கண்டு எழுதுக. ..............................

**(11) பின்வரும் ஆங்கில எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி ஆங்கிலச் சொற்களாக்குக.**

(i) a / l / t / i :- .............................   (ii) t / b / a / o :- .............................

**(12) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.**

(i)  :- .............................   (ii)  :- .............................

**(13) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) I am drinking water. :- .............................   (ii) Happy birthday :- .............................

**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

மல்லி இன்னவா :- ..............................

**(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**


நாங்கள் விளையாடுவோம் :- ..............................

(16) (i) 9999 + 1 இன் பெறுமானம் யாது? ..............................


(ii) பத்தினிடத்து இலக்கம் 3, ஆயிரத்தினிடத்து இலக்கம் 1, ஒன்றினிடத்து இலக்கம் 7, நூறினிடத்து இலக்கம் 0 ஆகவுள்ள எண் யாது? ..............................

(17) உரோம எண்குறி VIII ஐ ஆக்குவதற்கு ஒரேயளவான நீளமுள்ள ஐந்து ஈர்க்குத் துண்டுகள் தேவைப்படும். அதன்படி, உரோம எண்குறிகளில் 4 மற்றும் 9 ஐ ஆக்குவதற்குத் தேவைப்படும் ஒரேயளவான நீளமுள்ள ஈர்க்குத் துண்டுகளின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

(18) 6306, 6004, 6434, 6010 ஆகிய எண்களைப் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண் வரையான ஒழுங்கில் (இறங்குவரிசையில்) எழுதுக. ..............................

(19) 

இக்கடிகார முகத்தினால் காட்டப்பட்டுள்ள நேரம் 4 கழிந்து 40 நிமிடங்களாகும். இதே நேரத்தை வேறொரு முறையில் எழுதுக. ..............................

(20) 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? ..............................


(21) (i) கொய்யாப்பழம் ஒன்றின் விலை ரூபாய் 16.25 ஆகும். மாம்பழம் ஒன்றின் விலை ரூபாய் 25.75 ஆகும். அதன்படி, இரண்டினதும் விலைகளின் கூட்டுத்தொகை யாது? ..............................

(ii) மேற்படி, இரண்டு பழங்களையும் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபாய் 20.00 நாணயத் தாள்கள் 2 உம், ரூபாய் 10.00 நாணயக் குற்றி 1 உம் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் யாது? ..............................


(22) அதிபரிடம் இருந்த 764 பேனைகளை ஒரு பிள்ளைக்கு மூன்று வீதம் விநியோகிக்கப்பட்டது. அதன்படி,

(i) மூன்று பேனைகள் வீதம் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..............................

(ii) பேனைகளைப் விநியோகித்த பின்னர் அதிபரிடம் எஞ்சியிருந்த பேனைகளின் எண்ணிக்கை யாது? ..............................

(23) 



பிள்ளையொன்று A யிலிருந்து B வரை மேற்குத் திசை நோக்கிச் சென்று அங்கிருந்து தெற்குத் திசை வழியே C யை அடைந்தது. அதன்படி அப்பிள்ளை மீண்டும் C யிலிருந்து A வரை பயணிக்கும் திசைகளை ஒழுங்குமுறையில் எழுதுக. ..............................

(24) 


இவ்விரண்டு எண்சட்டங்களும் காட்டும் எண்களின் கூட்டுத்தொகையை இலக்கங்களில் எழுதுக. ..............................

kalvi.lk

சுட்டெண்:-..........................................

(25) 

உருவில் காட்டப்பட்டுள்ள திண்மத்தின்,

(i) முகங்களின் எண்ணிக்கை யாது? ..................................

(ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ................................


(26) **A , L , M , S , H , O** இவ்வாங்கில எழுத்துக்களுள் சமச்சீர் அச்சுகள் வரையக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் எத்தனை உள்ளன? ....................................

(27) தற்போது நேரம் பி. ப. 10.15 ஆகும். நாள் முடிவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் உள்ளது? ...............................................

(28) என்னிடம் ரூபாய் 160.00 உள்ளது. ஒன்று ரூபாய் 25.00 வீதம் 7 அப்பிள் பழங்களை வாங்குவதற்கு இன்னும் தேவையான பணம் எவ்வளவு? ...........................................................................

(29) 3500ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 1700ml பால் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 1900ml பாலைக் ஊற்றும்போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் பாலின் அளவு யாது? ...........................................................................................


*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**


(30) 

இச்செயற்பாடு அழைக்கப்படுவது,

(1) நண்டு போன்று நடந்து செல்லல் (2) யானையைப் போல் பயணித்தல் (3) கபறகொயா போல் பயணித்தல்

(31) பசளி இலையைக் காட்டும் உரு,

(1)  (2)  (3) 

(32) 

சட்டக்காந்தமொன்று நூலினால் சரிநடுவே கட்டப்பட்டு தொங்கவிடப்பட்டுள்ள முறை உருவில் காட்டப்பட்டுள்ளது. இப்பரிசோதனை செய்யப்படுவது,

(1) சட்டக்காந்தத்தில் கவரும் தன்மை அதிகமாக உள்ள இடங்களைக் கண்டறிவதற்கு
(2) திசையைக் கண்டறிவதற்கு
(3) சட்டக்காந்தத்தை கவரும் பொருட்களைக் கண்டறிவதற்கு

(33) தேசப்படங்களில் நீல நிறத்தினால் காட்டப்பட்டிருப்பது,

(1) காடுகளை (2) மலைப் பிரதேசங்களை (3) நீர்நிலைகளை

(34) 

இவ்விளையாட்டை நாம் அதிகமாகக் காணக்கூடியது,

(1) ஜனவரி மாதத்தில் (2) ஏப்ரல் மாதத்தில் (3) ஜூலை மாதத்தில்

(35) நெத்தலியை உண்பதனால் உடலுக்குக் கிடைக்கும் போசணைப் பொருள்,

(1) கொழுப்பு (2) காபோவைதரேற்று (3) கல்சியம்


(36) விளையாட்டு உபகரணமாக மூங்கில் பயன்படுத்தப்படும் விளையாட்டு,

(1) ஹொக்கி (2) எல்லே (3) டென்னிஸ்

(37) 

உருவினால் காட்டப்பட்டுள்ள பறவை,

(1) காட்டுக்கோழி (2) செண்பகம் (3) மயில்

(38) 

உருவினால் காட்டப்பட்டுள்ள விளையாட்டு,

(1) ஈட்டி எறிதல் (2) கோலூன்றிப் பாய்தல் (3) அஞ்சலோட்டம்

(39) வெற்றிலைக் கொடி கொழுகொம்புடன் பற்றுவது,

(1) முட்களின் மூலம் (2) வேர்களின் மூலம் (3) கிளைகளின் மூலம்

(40) தேவேந்திரமுனையில் இருந்து மிக அதிக தூரத்தில் அமைந்திருப்பது,

(1) சங்கமன்கந்த முனை (2) யானை முனை (3) பருத்தித்துறைமுனை

(41) புவி சூரியனைச் சுற்றி ஒரு தடவை பயணிக்க எடுக்கும் காலம்,

(1) ஒரு வருடம் (2) ஒரு நாள் (3) ஒரு மாதம்

(42) இலங்கையின் மிக உயர்ந்த கோபுரமான தாமரைக் கோபுரம் அமைந்திருப்பது,

(1) அநுராதபுரம் (2) கொழும்பு (3) நுவரெலியா

kalvi.lk

(43) ஆதிகால மனிதன் தொடர்பாடலை மேற்கொள்ளப் பயன்படுத்திய முறைகளாவன,

(1) தீக்குவியல் மூட்டல், கொடியசைத்தல் மூலம். (2) கடிதம் அனுப்புதல், தொலைபேசி மூலம்

(3) மின்னஞ்சல் அனுப்புதல், தொலைநகல் மூலம்

(44) அரச இலச்சினையில் காணக்கிடைக்காதது,

(1) நிறைகுடம், நெற்கதிர்கள் (2) வாளேந்திய சிங்கம், சூரியன் சந்திரன் (3) அரச இலைகள், பூங்கொடி அலங்காரம்


(45) 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது,

(1) ஒல்லாந்தரிடமிருந்து (2) ஆங்கிலேயரிடமிருந்து (3) போர்த்துக்கேயரிடமிருந்து

(46) கீழே தரப்பட்டுள்ள பறவைகளில் அதிக தூரம் பறக்கக்கூடிய பறவை,

(1) புறா (2) மயில் (3) சேவல்

(47)



இக்குறியீட்டினால் கருதப்படுவது,

(1) நொருங்கக்கூடியது (2) மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு

(3) மீள் சுழற்சிக்குட்படுத்தக் கூடியது.

(48) நாய் தனது வியர்வையை வெளியேற்றுவது,

(1) தோலினால் (2) நாக்கினால் (3) மூக்கினால்

(49)



இவ்வீதிச் சமிக்ஞை மூலம் கருதப்படுவது,

(1) முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை உள்ளது.

(2) முன்னால் புகையிரத நிலையம் உள்ளது. (3) முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை உள்ளது.

(50) இலங்கையில் மிகப் பெரிய தாவரவியற் பூங்கா அமைந்துள்ளது,

(1) பேராதனை (2) நுவரெலியா (3) திருகோணமலை

(51) வெட்டுவதற்கு முன் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய தாவரம்,

(1) பலா (2) மா (3) கமுகு

(52) வெள்ளை நிறத்திலான இரண்டு பூ வகைகள்,

(1) சூரியகாந்தி, மேமலர் (2) முள்முருங்கைப் பூ, கொன்றைப் பூ (3) மல்லிகைப் பூ, நந்தியாவட்டைப் பூ

(53) இசைப்பதற்கு வேறு எந்த உபகரணமும் தேவைப்படாத ஓர் இசைக்கருவி,

(1) வயலின் (2) புல்லாங்குழல் (3) தம்பட்டம்

(54) மின்சோதிப்பான் (Tester) மூலம் கம்பியில் மின் பாய்கிறதா? எனப் பார்க்கும்போது கம்பியில் மின் இருப்பின்,

(1) மின்சோதிப்பானில் உள்ள மின்குமிழ் ஒளிரும். (2) மின்சோதிப்பான் ஒலியெழுப்பும்.

(3) மின்சோதிப்பான் சூடாகும்.

(55) வட்டக்கண்ணி இலையை மிகவும் விரும்பி உண்ணும் பிராணி,

(1) நத்தை (2) மயிர்க்கொட்டி (3) மின்மினிப்பூச்சி

(56) மரங்களின் தண்டுகளின் மேல் வளரும் தாவர வகைகள்,

(1) குப்பைமேனி, கற்றாளை (2) கடுபுல், ஒக்கிட் (3) நொச்சி, தேங்காய்ப்பூக்கீரை

(57) மிக விரைவில் முளைக்கும் வித்து வகை,

(1) கடுகு (2) பாக்கு (3) வெண்டி

(58) பாம்பின் எதிரி,

(1) முள்ளம்பன்றி (2) உடும்பு (3) கீரி

(59)



இக்கலைப்படைப்பு காணக்கிடைப்பது,

(1) சீகிரியாவில் (2) இசுருமுனியவில் (3) எம்பக்கவில்

(60) **“இன்று எனது பிறந்தநாளாகும்” எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

kalvi.lk